[1978 மார்ச் 22

முந்திரி ஆலைத் தொழிலாளர்கள்.

* 666வினா.—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு தொழிலாளர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கச்சா முந்திரிப் பற்றாக்குறையினால் குமரி மாவட்டத்திலுள்ள முந்திரி ஆலைகள் மூடப்பட்டு 50 ஆயிரத்துக்கு மேல் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளார்களா?

(ஆ) இது சம்மந்தமாக அரசு தரப்பில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) குமரி மாவட்டத்தில் கச்சா முந்திரிப்பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் தற்போதைய மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ ஏழாயிரத்து அறுநூறு (7,600) ஆகும்.

(ஆ) கச்சா முந்திரி பெருமளவில் உற்பத்தி செய்வதானால் முந்திரி தொழிற்சாலைகள் தடையின்றி இயங்க வாய்ப்பு உண்டு எனக் கருதி தீவிர கச்சா முந்திரி உற்பத்திக்கு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9—50)

திரு. தே. ஞானசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்யும் 160 ஃபாக்டரிகள் இந்தத் தொழிலைச் செய்து வருகின்றன. அங்கே வருடம் பூராவும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப் போதுமான கச்சா முந்திரி கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆமெனில் தமிழகத்தின் கோட்டாவை 17 சதவீதமாக அதிகரித்துக் கொடுக்கும்படி மத்திய அரசை வற்புறுத்த நமது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் மொத்தம் 137 முந்திரித் தொழிற்சாலைகள் உள்ளன. அவைகளில் 127 கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கின்றன. இப்போது நமக்குக்கிடைக்கும் கச்சா முந்திரி 10 ஆயிரம்டன், 19 ஆயிரம் டன் இறக்குமதி செய்யப்பட்டு இந்திய முந்திரிக் கழகத்தின் மூலமாகப் பெறுகிறோம். நம்முடைய மொத்தத் தேவை 1,24,000 டன். மீதியுள்ள 95,000 டன் கச்சா முந்திரியைப் பெற்றால்தான் முந்திரித் தொழிற்சாலைகள் எந்தவிதத் தடங்கலுமின்றி இயங்க முடியும் என்பதை அறிந்து உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 22]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, மத்திய முந்திரிக் கார்ப்பரேஷனிலே தமிழ் நாட்டுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆமெனில் தமிழ்நாட்டுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கும்படி மத்திய அரசிடம் வற்புறுத்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதைப்பற்றித் தகவல் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற முந்திரி ஆலைகள் பெரும்பாலும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. கேரள மாநிலத்திலிருந்து கச்சா முந்திரி கொண்டு வருவதற்குத் தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் பல தொழிற்சாலைகள் அங்கே மூடப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் 1970ஆம் ஆண்டுக்குப்பின் தொடங்கப்பட்ட முந்திரி ஆலைகளுக்கு முந்திரிக் கார்ப்பரேஷனிலே இருந்து கச்சா முந்திரி கிடைப்பதில் ஏற்பட்டிருக்கின்ற தடையும் மற்றொரு காரணமாகிறது. ஆகையால் மத்திய அரசை அணுகி 1970ஆம் ஆண்டுக்குப்பின் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கும் கச்சா முந்திரி கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, கேரள அரசால் பிறப்பிக்கப்பட்டிருக்கிற கேரள கச்சா முந்திரி நடமாட்டக் கட்டுப்பாடு உத்தரவை ரத்து செய்யுமாறு அவர்களைக் கேட்டு இருக்கிறோம். அதோடு இந்திய முந்திரிக் கழகத்திலிருந்து மேலும் கச்சா முந்திரி வாங்க பேச்சு வார்த்தைகள் நடத்தி எளிதில் தடையை நீக்கவும், இந்திய முந்திரிக் கழகத்திலிருந்து அதிகமாக முந்திரி பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உற்பத்தியாகும் முந்திரியைத் தனியார்கள் சிலர் கொள் முதல் செய்து வெளி மாநிலத்திற்குக் கொண்டு செல்கின்றனர். தமிழகத்தில் முந்திரியை அரசே கொள்முதல் செய்து தமிழகத்தில் இருக்கின்ற முந்திரித் தொழிற்சாலைகளுக்குச் சப்ளை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழுத் தகவல் சேகரித்துத் தருகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, கச்சா முந்திரி தென் ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. அது தடைப்பட்டிருக்கின்ற காரணத்தால் இந்த முந்திரித் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆகவே தமிழ்நாட்டிலே முந்திரி பயிரிடுவதை ஊக்குவிக்கும் அடிப்படையில் சென்ட்ரல் காஷ்யூ கார்ப்பரேஷனிடமிருந்து தமிழ்நாட்டுக்கு இரண்டு கோடி முதல் நான்கு கோடி வரை பணம் தரப்படுவதாகச் சொல்லப்பட்டது. அந்தப் பணம் எந்த அடிப் படையில் செலவழிக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். அடுத்து தென் ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யும் ஏற்பாட்டை மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி நடைமுறைப்படுத்தி இறக்குமதி செய்வதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்யும் கச்சா முந்திரியை இந்திய முந்திரிக் கழகம் மாநில வாரியாகப் பங்கிடுகிறது. அதில்தான் 19,000 டன் நமக்குக் கிடைக்கிறது என்று சொன்னேன். நமது அரசைப் பொறுத்த வரையில் தமிழக வேளாண்மைத் துறை மத்திய அரசு உதவியுடன் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கச்சா முந்திரி தரத்தை உயர்த்தவும் இந்தத் திட்டங்களில் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் பல திட்டங்களுக்கு மத்திய அரசின் உதவியையும் கோருவதாகயிருக்கிறது.

பின்தங்கியோர் நலன் பற்றிய குழுவின் பரிந்துரைகள்.

*667 வினா—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சட்டநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட பின்தங்கி யோர் நலன் பரிந்துரைக் குழு கொடுத்த அறிக்கையின்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1969ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நியமிக்கப்பட்ட திரு. சட்டநாதனைத் தலைவராகக் கொண்ட பிற்பட்டோர் நலக்குழு 110 பரிந்துரை களைக் கொண்ட அறிக்கையினை 1971ஆம் ஆண்டு சனவரித் திங்களில் அரசுக்கு அளித்தது. இவற்றில் பல பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. சில பரிந்துரைகள் நிதிநிலை காரணமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.